செ.வெ.எண்: 43 நாள்:18.11.2019

கரூர் மாவட்டம்

**கருவறை முதல் கல்லறை வரை தேவைப்படும் அனைத்து திட்டங்களையும் வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் மண்மங்கலம் மற்றும் குளித்தலை வட்டங்களுக்குட்பட்ட 2,511 பயனாளிகளுக்கு ரூ.22.36கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டங்கள் வாரியாக நடைபெற்றது. இதில் இன்று (18.11.2019) காலை மண்மங்கலம் வட்டத்திற்குட்பட்ட 1,652 பயனாளிகளுக்கு திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.14,97,89,317 மதிப்பிலும், மாலை குளித்தலை வட்டத்திற்குட்பட்ட 859 பயனாளிகளுக்கு ரூ.7,37,54,382 மதிப்பிலுமான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு அனைத்து வகையான நலத்திட்டங்களும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், மக்கள் பிரதிநிதிகள் கிராமம் கிராமமாகச் சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது உடனடி தீர்வு கண்டு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், இரண்டு மாத காலமாக கரூர் மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு கரூர் மற்றும் கடவூர் வட்டங்களுக்குட்பட்ட பகுதி மக்களுக்கு நேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட நிலையில், இன்று மண்மங்கலம் மற்றம் குளித்தலை வட்டங்களுக்குட்பட்ட மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அண்மையில் நடந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் பேருக்கு முதியோர் மற்றும் விதவை உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மற்ற மாவட்டங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது நமது மாவட்டத்தில் குறைந்த அளவே முதியோர் மற்றும் விதவை உதவித்தொகைக்கான ஆணைகள் பெறப்பட்டிருந்தது. இதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்றவுடன், நமது கரூர் மாவட்டத்திற்கு மேலும் கூடுதலா முதியோர் மற்றும் விதவை உதவித்தொகை வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் 35,327 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 23,939 மனுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. இதில் 8,000 பேருக்கு முதியோர் மற்றும் விதவை உதவித்தொகைகள் வழங்கப்படவுள்ளது. 11,388 நிராகரிக்கப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்டுள்ள மனுக்களை மீள்விசாரணை செய்யப்படவுள்ளது. முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிக்கு ரூ.50,000க்குள் சொத்து மதிப்பு இருக்க வேண்டும் என்ற விதிகளை தளர்த்தி மாற்றி, ரூ.1லட்சம் வரை சொத்துமதிப்பு உள்ளவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்கலாம் என்ற உத்தரவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். அதனடிப்படையில், தற்போது நிகாரிக்கப்பட்டுள்ள மனுக்களை மறுபடியும் விசாரணை செய்து தளர்த்தப்பட்ட விதிகள் பொருந்தும் நபர்களுக்கும் விரைவில் முதியோர் மற்றும் விதவை உதவித்தொகை கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆட்சிக்கு வந்தால், குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் அரிசி வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்தி முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் போட்ட முதல் கையெழுத்தே, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ அரிசி இலவசம் என்பதே ஆகும். தமிழ்நாட்டின் எவரொருவரும் பசியால் வாடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தை வழங்கினார்கள். இந்தியாவிலே வசிக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் 5கிலோ உணவுப்பொருள் உறுதிசெய்யப்படவேண்டும் என்ற உணவுப்பாதுகாப்புத்திட்டத்தை மத்திய அரசு இப்போது அறிவித்துள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் 8 ஆண்டுகளுக்கு முன்பே 20கிலோ விலையில்லாத அரிசியை வழங்கினார்கள்.

தேர்தல் நேரத்தில் கொடுக்கப்படும் வாக்குறுதிகளை மற்றும் அல்ல, தான் சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றிக்காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். 20சதவீத தள்ளுபடி விலையில் மருந்துகளை வழங்கும் அம்மா மருந்தகம் திட்டம், 1ரூபாய்க்கு இட்லியும். 5 ரூபாய்க்கு கலவை சாதங்களும் வழங்கும் அம்மா உணவகனம் திட்டம், 10 ரூபாய்க்கு அம்மா குடிநீர், குறைந்த விலையில் அயோடின் நிறைந்த அம்மா உப்பு என பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்திக்காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அனைவருக்கும் மாதந்தோறும் 100 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்து செயல்படுத்தி, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிக்காட்டியவர் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள்.

நமது கரூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு ரூ.6 கோடி மதிப்பிலான எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியினை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நமது முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி என்பதால், தமிழகத்து விவசாயிகளின் நலன் கருதி குடிமராமத்து என்ற திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாகவே செயல்படுத்தி, தமிழகத்தில் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட அனைத்து நீர்வழித்தடங்களையும், நீர்நிலைகளையும் தூர்வாரி இன்று கடைமடைவரை நீர் சென்று விவாசயிகளின் வாழ்க்கையில் செழிப்பை தரும் அளவிலான திட்டத்தை செயல்படுத்திக்காட்டியுள்ளார். அதுமட்டுமல்லாமல், சின்னதாராபுரத்தில் அமராவதியில் தடுப்பணை, அரவக்குறிச்சி பகுதியில் நங்காஞ்சி குடகனாற்றில் தடுப்பணை வேண்டும் என கோரிக்கைவைத்தவுடனேயே, உடனடியாக அதற்கான திட்டமதிப்பீடு தயார்செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். விரைவில் அந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

கரூரில் சுமார் ரூபாய் 300 கோடி மதிப்பில் அரசு மருத்துவக்கல்லூரியினை வழங்கி, குளித்தலை அரசு மருத்துவமனையினை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு. மேலும், பிரசிதிபெற்ற அருள்மிகு இரத்தனகிரீஸ்வரர் கோவில் அமைந்துள்ள அய்யர் மலை பகுதியினை சிறந்த சுற்றுலாதலமாக மாற்றும் வகையில், தரையில் இருந்து மலைக்கு விரைவில் ரோப்கார் அமைக்கப்படும். மேலும், மலையினைச்சுற்றி கிரிவலப்பாதையில் ரூ.1.75கோடி மதிப்பில் சாலை மற்றும் எல்.இ.டி. விளக்குகள் அமைப்பதற்கு சுற்றுலா துறைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குளித்தலை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விரைவில் புதிய பேருந்துநிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும். தோகைமலை பகுதி மக்களுக்காக ரூ.53கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது தமிழ்நாட்டில்தான் ஒரு தனிமனிதனுக்கு கருவரை முதல் கல்லறை வரை தேவையான அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ள அனைத்து திட்டங்களையும், மேலும் செம்மைப்படுத்தி சிறப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட காவல்கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, குளித்தலை சார் ஆட்சியர் திரு.ஷே.ஷேக்அப்துல்லா.இஆப., கரூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வ.சந்தியா, முன்னாள் அமைச்சர் திரு.பாப்பாசுந்தரம், கரூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு.எம்.எஸ்.மணி, சமூகப்பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.பாலசுப்பிரமணியம், தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கி இணைய தலைவர் மற்றும் கரூர் நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.திருவிகா, மாவட்ட கூட்டுறவு அச்சகத்தலைவர் திரு.மார்க்கண்டேயன், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சிவசாமி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு. பேங்க் நடராஜன், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தலைவர்கள் திரு.வி.சி.கே.ஜெயராஜ் (கரூர்), பாலவிடுதி கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் திரு.செல்வராஜ், திரு.எம்.எஸ்.கண்ணதாசன்(குளித்தலை), வைகநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுகடன்சங்கத் தலைவர் திருமதி.சசிகலாரவி, குளித்தலை நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.சோமுரவி, தண்ணீர்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.விநாயகம், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் திரு.பொரணி கணேசன், திருமதி.மோ.ரேணுகா, திரு.தமிழ்நாடு செல்வராஜ், திரு.என்.எஸ்.கிருஷ்ணன், வட்டாட்சியர்கள் திரு.செந்தில்(மண்மங்கலம்), திரு.மகாமுனி(குளித்தலை) உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.